# பௌத்த, இந்து மக்களின் மரணக்கிரியைகளுக்கிடையிலான பண்பாட்டு இடைவினைகள் : அம்பாறை மாவட்டத்தை மையப்படுத்தியது

**Subaraj, N[1] and Vethanathan,M[2].**

[1]Department of Languages, South Eastern University of Sri Lanka, , Sri Lanka
[2]Jaffna ,Department of Hindu Civilization University, Jaffna

*Subaraj84@yahoo.com*

## ABSTRACT

*The Hindu religion and Buddhism are the religions that have been among the people since ancient times in Sri Lanka. These two religions have long since been associated with them. There are Tamils who practice Hinduism as well as Sinhala people who practice Buddhism. Although the two ethnic groups have encountered conflict with various reasons, their cultural hybrids have been inevitable. The interaction of two communities in Sri Lanka has been cultural mixed. As far as Sri Lanka is concerned, Hindus and Buddhists are interacting. It can be either positive interactions or negative interactions. But any interaction that has arisen has caused a cultural blend of the two religions.*

*Ampara is an area where the all the three ethnic people are living. There are many areas where Hindus live together with Buddhists. There is a cultural blend of the two religions here. Life ethics, the rites of life and other cultural aspects are interconnected to Hindus and Buddhists in this area. The main objective of this research is to demonstrate the mutual relationship between the funeral rituals of the Hindu and Buddhist masses.*

*Through the Cultural interactions between Hindu and Buddhist communities in Ampara district, cultural mixing has been arisen. The good example for this cultural mixing is, the funeral ritual of these communities. This research mainly based on comparative study and historical research study. The method of reciprocity (comparative study) is used to analyze and compare the deaths of Hindus and Buddhists separately. The data obtained through the field will be the primary data for this research and the data which is obtained from interviews, observation, questionnaire and direct participation, will be analyzed for this research purpose. These are used as primary data and source for this research. The books, magazines, CDs and Internet articles regarding life ethics and rites of life of Hindu and Buddhists people, will be taken as secondary data and source for this research purpose.*

*Ampara is a multicultural area. So the religion, language and life ethics of a community essentially have to be respected by other community. So the study of the cultural blend of Hindu and Buddhist religions, through the cultural interactions, emphasizes the importance of the research. This leads to the unity of multicultural people in this country.*

**Keywords:** *Buddhist, Hindu, Cultural Interactions, Funeral Rituals*



ISBN 978-955-627-120-1

## 1. அறிமுகம்

இலங்கையில் பண்டைய காலத்திலிருந்து மக்களிடையே பெரும் வழக்கில் இருந்த மதங்களாக இந்துமதமும் பௌத்தமதமும் உள்ளன. இவ்விரு மத மக்கள் தமக்கிடையே மிக நெருங்கிய தொடர்புடையவர்களாக காலந்தோறும் இருந்து வருகின்றனர். இந்துமதத்தைக் கடைப்பிடிப்பவர்களாக தமிழர்களும் பௌத்தமதத்தைக் கடைபிடிப்பவர்களாக சிங்கள இனத்தவர்களும் உள்ளனர். பல்வேறு காரணங்களால் இவ்விரு இனமக்களும் முரண்பாடுகளைச் சந்தித்த போதிலும் இவர்களது பண்பாட்டுக் கலப்பு என்பது தவிர்க்க முடியாததொன்றாகவே இருந்து வந்துள்ளது. இலங்கையில் இருசமூகங்களின் இடைவினைகளால் பண்பாட்டுக்கலப்பு ஏற்பட்டுள்ளது. இலங்கையைப் பொறுத்தவரை இந்துக்களும் பௌத்தர்களும் இடைவினைகளுக்குட்படுகின்றனர். அது உடன்பாடான இடைவினைகளாகவோ எதிர்மறையான இடைவினைகளாகவோ இருக்கலாம். ஆனால் இவ்வாறு ஏற்படும் எந்தவொரு இடைவினைகளும் இவ்விருமதங்களுக்கிடையிலான பண்பாட்டுக்கலப்பை ஏற்படுத்தியுள்ளது.

கிழக்கிலங்கை மாவட்டங்களுள் அம்பாறை மூவின மக்களும் செறிந்து வாழுமிடமாகும். பௌத்தர்களோடு இந்துக்கள் இணைந்து வாழும் பல பிரதேசங்கள் இங்குள்ளன. இங்கு இவ்விரு மதத்தவர்க்கிடையே பண்பாட்டுக் கலப்பு அதிகமாக இடம் பெற்றுள்ளன. இறை வழிபாடுகள், வாழ்க்கை நெறிமுறைகள், வாழ்வியற் சடங்குகள் மற்றும் ஏனைய பண்பாட்டம்சங்கள் என்பன இப்பிரதேசத்தில் இந்துக்களிடமும் பௌத்தர்களிடமும் பரஸ்பரத் தொடர்புகளை கொண்டுள்ளன. இவ்வகையில் இந்து, பௌத்த மக்களின் மரணக்கிரியைகளுக்கிடையிலான பரஸ்பர தொடர்புநிலைகளை வெளிக்காட்டுதல் இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும். அம்பாறை வாழ் இந்து, பௌத்த சமூகங்களுக்கிடையே பண்பாட்டு இடைவினைகள் மூலம் பண்பாட்டுக் கலப்பு ஏற்பட்டுள்ளது. அதற்கு ஒரு சிறந்ததொரு அடையாளமாக மரணக்கிரியைகள் உள்ளன என்பது இவ்வாய்வின் பிரச்சினையாகும்.

அம்பாறை பல்லின மக்கள் இணைந்து வாழும் பிரதேசமாதலால் பிற இனங்களின் மதம், மொழி, பண்பாடு, வாழ்வியல் நெறிகளை மதித்தும் போற்றியும் நடக்க வேண்டியது இன்றியமையாததொன்று. மரணக்கிரியைகளின் பண்பாட்டு இடைவினைகள் மூலம் இடம் பெறும் இந்து பௌத்த மதங்களின் பண்பாட்டுக் கலப்பு பற்றிய ஆய்வு இத்தேவையின் அத்தியாவசியத்தை உணர்த்தும். இத்தேசத்தின் பல்லின சமூகங்களின் ஒன்றுபட்ட நடத்தை முறைக்கும் இது வழிசமைக்கும்.

## 2. ஆய்வு முறையியல்

பண்புசார் ஆய்வாக அமையும் இவ்வாய்வு மாதிரிமுறையில் தரவுகளை சேகரித்து பகுப்பாய்வுக்குட்படுத்துகின்றது. அம்பாறை மாவட்டத்தின் 20 பிரதேச செயலகப்பிரிவுகளில் லகுஹல, அட்டாளைச்சேனை, ஆலையடிவேம்பு, இறக்காமம், கல்முனை (தமிழ்), நாவிதன்வெளி, பொத்துவில், சம்மாந்துறை ஆகிய எட்டுப் பிரதேச பிரிவுகள் ஆய்வு மாதிரிகளாகக் கொள்ளப்படுகின்றன.

இவ்வாய்வு ஒப்பியலாய்வு முறை, வரலாற்றியல் ஆய்வு முறைகளை பிரதானமாகக் கொள்கின்றது. இந்துக்களினதும், பௌத்தர்களினதும் மரணக்கிரியைகளை தனித்தனியே ஆய்வு செய்து அவற்றை ஒப்பிட்டு நோக்குவதற்கு ஒப்பியலாய்வு பயன்படுத்தப்படும். களவாய்வு மூலம் பெறப்படும் தரவுகள் இவ்வாய்வுக்கான முதலாம்தர மூலங்களாக அமையவுள்ளன. வினாக்கொத்துக்கள், நேர்காணல்கள், பங்குபற்றுதல் அவதானம் போன்றன மூலம் பெறப்படும் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்படும். இவை ஆய்விற்கு



ISBN 978-955-627-120-1

முதலாம்தர மூலங்களாகப் பயன்படுத்தப்படும். ஆய்வின் துணை மூலங்களாக இந்து, பௌத்த மதங்களின் பண்பாடு, வாழ்வியல் நெறிகள் தொடர்பாக வெளிவந்த நூல்கள், இணையச் செய்திகள், பத்திரிகைத் தகவல்கள், ஒலியொளி நாடாக்கள், இறுவெட்டுக்கள் என்பன பயன்படுத்தப்படும்.

## 3. பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

வாழ்வியற் சடங்குகள் என்பது மனிதனது வாழ்வின் நலன் கருதி செய்யப்படும் சடங்குகளாகும். அச்சடங்குகள் ஒவ்வொரு மதத்தினதும் கலாசாரத்தை வெளிப்படுத்துகின்றது. வழிவழியாக செய்யப்பட்டுவந்த சடங்குகளை எதிர்காலத்தில் அழிந்து விடாது இருக்கும் வகையில் அவற்றை பாதுகாக்க வேண்டும். அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்துக்களின் வாழ்வியலுக்கும் பௌத்தர்களின் வாழ்வியலுக்கும் மிக நெருங்கிய தொடர்புகள் உள்ளன. இந்து மதத்திலிருந்து பல்வேறு விடயங்களை உள்வாங்கிக் கொண்ட பௌத்தமானது தன் வாழ்வியற் சடங்கு முறைமைகளில் இந்து மதத்துடன் சில விடயங்களில் ஒன்றித்தும் சில விடயங்களில் தனித்தும் செயற்படுகிறது. அவ்வகையில், இந்து மதமானது கடவுள் உண்டு என்றும் ஆன்மா உண்டு என்றும் சதுர்வர்ணத்தை ஏற்பதாகவும் காணப்பட, பௌத்தமானது கடவுள் இல்லை என்றும் ஆன்மா இல்லை என்றும் சதுர்வர்ணத்தை நிராகரிப்பதாகவும் அமைகிறது. இருப்பினும் ஆரம்பத்தில் பௌத்தம் இவற்றை எதிர்த்தாலும் காலப்போக்கில் கடவுள், ஆன்மா, சாதி அமைப்பு போன்ற அம்சங்களை தன்னோடு இணைத்துக்கொண்டு செயற்படத்தொடங்கியது. இன்றைய அளவிலும் இவ்விடயங்கள் பௌத்தத்தோடு இணைந்தே காணப்படுகின்றன.

இலங்கையில் பௌத்தர்களும் இந்துக்களும் நெருங்கிய குடியிருப்புகளையும் நித்திய வாழ்வியல் நெறிமுறைகளையும் கொண்டிருப்பதனால் கணிசமான பண்பாட்டம்சங்களை வழங்கியும், உள்வாங்கியும் வருகின்றனர். அவ்வகையில் மரணக்கிரியைகளில் இடம் செம்பிரதாயங்களில் இவ்விரு சமுதாயங்களும் கணிசமானளவு ஒன்றுபட்டு நிற்கின்றன. அவற்றினை தனித் தனிக் கூறுகளாக எடுத்தாரய்வது அவசியமானது.

### 3.1 மரணம் நிகழ்ந்ததை தெரியப்படுத்தல்

குடும்பம் ஒன்றில் ஒருவர் இறக்கும் போது அதனை பிறருக்கு அறிவித்தல் முக்கியமானது. குறிப்பாக இறந்தவர் சார்ந்திருக்கும் சமயத்தின் மதகுருமார், பெரியவர்கள், உறவினர்கள் போன்றோருக்கு அறிவிப்பு செய்ய வேண்டும். இதனை இந்து, பௌத்த மதத்தை சார்ந்தவர்கள் ஒரு சம்பிரதாயமாகவே இங்கு செய்கின்றனர்.

இந்துக்களாயின் மரணம் நடந்த இடத்தில் உள்ள ஆலயத்தில் பூசை நடவாதிருப்பதற்கும், வண்ணாக்கர் வந்து மரண வீட்டு கருமங்களை செய்வதற்கும் அறிவிப்புச் செய்கின்றனர். ஊரில் பிரேதம் இருக்கும் வரை உறவினர் எல்லோருக்கும் தீட்டு இருப்பதாகக் நம்புகின்றனர். இதுபோல் பௌத்தர்கள் இறப்பு நடந்தவுடன் பௌத்த விகாரைக்கு அறியப்படுத்துவார்கள்.[1] மரண வீட்டில் மதகுருமார் நிறைவேற்ற வேண்டிய காரியங்கள் உள்ளமையால் மரண நிகழ்ந்தமையை தெரியப்படுத்துகின்றனர்.

இறப்பு இடம் பெற்றுள்ளமை அயலவர் அறிவதற்காக இருமதத்தவரும் ஒலிபெருக்கி வழியாகவும், ஊடகங்கள் என்பன உதவியுடனும் இறந்தவர் யார், எந்த இடத்தை சேர்ந்தவர், அவரது இறுதி கடமை எப்போது இடம்பெறும், அதாவது மயானத்திற்கு எடுத்து செல்லப்படும் என்பதை பற்றியும் அறிவிப்பர். இது இவ்விரு மதத்தாராலும் தற்போதும் கூட நடைமுறையில் உள்ள வழமைகளாகும்.[2]



ISBN 978-955-627-120-1

### 3.2 எண்ணெய் வைத்தல் - நீராட்டுதல்

இந்துக்களைப் பொறுத்த வரையில் எண்ணெய் வைத்தல் - நீராடுதல் முக்கிய சடங்காக நிகழ்த்தப்படுகின்றது. வீட்டுவளவில் பந்தலிட்டு அதில் உடலை வைத்து உடலுக்கும், தலைக்கும் எண்ணெய் வைத்து அரப்பு, எலுமிச்சைப்பழம் தோய்த்து நீராடி, புத்தாடை அணிவித்து இறுதிக் கிரியை நடக்கும் இடத்திற்கு எடுத்து வருவர். பௌத்தர்களை பொறுத்தவரையில் இவ்வாறான எண்ணெய் வைத்தல், நீராட்டல் போன்ற நிகழ்வுகள் சடங்கு முறையாக நிகழ்த்தப்படுவதில்லை. இறந்தவுடன் சாதாரணமாக நீராட்டி, அணிவிக்கும் ஆடை தவிர விசேட ஆடைகள் எதுவும் அணிவிப்பதில்லை.[3]

### 3.3 இறந்தவரின் உடல் வைக்கப்படும் திசை பற்றிய நம்பிக்கை

இந்து, பௌத்த மதத்தவரிடையே வடதிசையில் தலை வைத்துப் படுத்தால் உடலுக்கு கெடுதல் ஏற்படும் என்ற நம்பிக்கை உண்டு.[4] இதனால் இறந்த பின்னரும் இறந்தவரின் தலையை வடக்கே இருக்கும் வகையில் உடலை கிடத்துகின்றனர். உடலுக்க பாதிப்பு ஏற்பட்டு உடல் விரைவாக பழுதடைந்து விடும் என்பதற்காக தெற்கே தலை இருக்க வேண்டும் என்ற நம்பிக்கை இவ்விரு மதத்தாரும் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

### 3.4 பிரேதம் வைக்கும் இடத்தின் மேல் வெள்ளைக் கட்டுதல்

இருமதத்தவரும் வெள்ளைக் கட்டுவதற்கு ஒரே காரணத்தையே கொண்டுள்ளனர். இதுவரை உடலை ஆதாரமாக கொண்டிருந்த உயிர் உடலை விட்டு வெளியேறியதும் ஆதாரம் இன்றி அந்தரப்படும் உயிர் தங்குவதற்காகவே புதிய தூய்மையான வெள்ளைக் கட்டப்படுவதாக நம்புகின்றனர். இது இந்துக்களின் மரணச் சடங்கில் ‘வண்ணான்’ என்று அழைக்கப்படும் ஆடை சலவை செய்யும் சாதியினரால் செய்யப்படுகின்றது. ஆனால், பௌத்த மரணச் சடங்குகளில் மரணாதார சங்கத்தினாலேயே இவை மேற்கொள்ளப்படும்.[5]

### 3.5 உடலின் தலைமாட்டில் குத்துவிளக்கேற்றல்

இறந்தவரின் அருகில் குத்துவிளக்கேற்றி வைத்தல் முக்கியமானதொரு பண்பாடாக உள்ளது. பண்டைய காலம் முதல் இவ்வழமை இரு சமூகத்தினரிடமும் உள்ளமையை அறிய முடிகின்றது. மின்சார வசதியில்லாத அக்காலத்தில் உடலின் முகத்தை தெளிவாக பார்க்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கத்தை செய்தார்கள்.[6] இருப்பினும் உடலை விட்டு வெளியேறி உயிர் இருட்டில் அலையாமல் இருக்க குத்துவிளக்கின் ஒளி உதவுகின்றது என்கின்ற நம்பிக்கை இரு மதத்தாரிடமும் உள்ளது.

இந்துக்களை பொறுத்த வரையில் பிரேதத்திற்கு தலைமாட்டில் ஏற்றப்பட்டிருக்கும் குத்துவிளக்கானது பிரேதத்தின் கடமைகள் நிறைவு பெற்ற பிறகும் அவ்விளக்கினை அணைய விடாமல் 8 நாட்களுக்கு எண்ணெய் ஊற்றுவர். சில இடங்களில் 31 நாட்களுக்கு இவ்விளக்கை அணைய விடாமல் கவனித்துக் கொள்வர். ஆனால் பௌத்தர்கள் அவ்வாறு இல்லை. பிரேதத்தை மயானத்திற்க கொண்டு செல்லும் போதே விளக்கை அணைத்து விடுவர்.[7] வீட்டில் ஒளி போன்று இருந்த உறவினர் போய்விட்டார் (விளக்கு அணைந்து விட்டது). இதனால் பிரேதம் வீட்டில் இருந்து போகும் வரை எறிந்தால் போதும் என்பதே அவர்களது கருத்தாகும்.

பௌத்தர்களின் வழமையில் குத்துவிளக்குடன் இறந்தவர்களுக்கு அருகில் வெள்ளைத் துணியால் மூடப்பட்டிருக்கும் நீர் செம்பு, ஊது பத்தி,



ISBN 978-955-627-120-1

மல்லிகை பூக்கள் வைக்கப்பட்ட நீர் நிறைந்த மண் சட்டி என்பன இடம் பெறுதல் சிறப்பம்சமாகும். அத்தோடு இறந்தவரின் உடலின் தலைமாட்டில் இருமருங்கிலும் யானைத்தந்தம் வைப்பது இவர்களின் முக்கிய வழமையாகும்.[8] இது இந்துக்களின் மரணச்சடங்குகளில் இருந்து பௌத்தர்களின் மரணச்சடங்கை வேறுப்படுத்திக் காட்டும் பிரதான சிறப்பம்சமாகும். இந்த யானை தந்தமானது இறப்பு நடந்தவுடன் மரணாதார சங்கத்தினரால் இறந்த வீட்டிற்கு கொண்டுவரப்பட்டு இறந்தவரின் அருகில் வைக்கப்படும். மீண்டும் 3 நாட்களின் பின் எடுத்துச் செல்லப்படும்.

### 3.6 பிரேதம் வீட்டில் வைக்கப்படும் நாட்கள்

இந்துக்களை பொறுத்த வரையில் இறந்தவர்களை இறந்த நாளன்றோ அல்லது மறுநாளோ அடக்கம் செய்வர். பின்னர் இறுதி கிரியைகள் அனைத்தும் மயானத்தில் நடைபெற்று மயானத்திற்கு சென்றவர்கள் வீடு திரும்பிய உடன் மயானத்திற்கு சென்றவர்களும், வீட்டில் இருந்தவர்களும் நீராடி வீட்டையும் கழுவுவர்.[9] இதன் பின் அன்றிலிருந்து 8 நாட்கள் வரை அயலவர்கள், தெரிந்தவர்களால் உணவு சமைத்து எடுத்து வரப்படும். அதனை அவ்வீட்டில் உள்ளோரும், அவ்வீட்டிற்கு வருவோருக்கும் பகிர்ந்தளிப்பர். வெளியில் இருந்து சாப்பாடு சமைத்து எடுத்து வரப்படாத பட்சத்தில் அவ்வீட்டில் உள்ளவர்களால் உணவு சமைக்கப்பட்டு அவ்வீட்டிற்கு வருவோருக்கு வழங்கப்படும். இறந்த உடல் வீட்டில் இருக்கும் போது சமைக்கக் கூடாது என்று இந்துக்களிடையே எவ்வித விதிமுறைகளும் இல்லை.[10] இவ்வாறான நிகழ்வுகள் இந்துக்களில் இருந்து பௌத்தர்களிடையே முற்றிலும் வேறுப்பட்டதாக காணப்படுகின்றது.

பௌத்தர்களை பொறுத்த வரையில் பிரேதம் கட்டாயம் மூன்று நாட்கள் பார்வைக்கு வைக்கப்படும். அதன் பின்னரே அடக்கம் செய்வர். உடலை வைத்திருக்க முடியாத சில சந்தர்ப்பங்களில் மூன்று நாட்களுக்கு முன் அடக்கம் செய்வர். இறந்த உடல் மயானத்திற்கு எடுத்துச் செல்லும் வரையில் அவ்வீட்டில் நெருப்பு பற்ற வைத்தல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.[11] அதனால் பக்கத்து வீட்டில் இருந்து சமைத்து எடுக்கப்பட்டு வீட்டுகாரர்களுக்கு உணவளிக்கப்படும்.

இந்துக்கள் இறந்த உடலை மயானத்தில் நல்லடக்கம் செய்துவட்டு வந்தபின் நீராடி, வீடு கழுவிய பின்னரே உணவு உண்பர். ஆனால் பௌத்தர்கள் அவ்வாறு இல்லை. பிரேதம் இருக்கும் போது மரணாதார சங்கத்தினால் வழங்கப்படும் உணவையும், தேனீர், குளிர்பானம் போன்றவற்றையும், அயலவரின் வீட்டில் வழங்கிய உணவையும் இறந்த வீட்டில் இருப்பவர்களும் உண்டு, அவ்வீட்டிற்ற வருகை தருவோரும் உண்பர்.

### 3.7 வாசகங்கள் ஓதல்

மரணம் நிகழந்த பின்னர் அங்கு வாசகங்கள் ஒதுதுதல் இரு சமூகமும் பின்பற்றும் நடைமுறைகளாகும். இந்துக்களை பொறுத்த வரையில் பாடப்படும் திருப்பாடல்கள் இறப்புடன் தொடர்பான பாடல்களாக இருத்தல் நல்லது. பஞ்சபுராணம், திருப்புகழ், பட்டினத்தடிகள் பாடல்கள் என்பன ஓதப்படுகின்றன.[12] இறந்த உயிரை இறைவனது உணர்வோடு இருக்க செய்யவும் இறைபதம் அடையச் செய்யவும் திருமுறை ஓதப்படுகின்றது.

இவ்வாறே பௌத்த மதத்தவர்களும் இறப்பு நடந்திலிருந்து 7 நாட்களுக்கு மரணகாவியம் படிப்பர். இது 'மழபெத' என அழைக்கப்படுகின்றது.[13] இந்து மதத்தில் மரணம் பற்றி பாடப்படுகின்ற பாடலில் இறந்த உயிர் நட்கதி அடைவது பற்றியே அதிகம் பாடப்பட்டுள்ளது. ஆனால் பௌத்த மதத்தவர்களின் இறப்பு பற்றிய பாடல்களில் அதிகமாக தாய் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு இறந்த பின் நாம் செய்த நன்மை, தீமைக்கேற்ப அனைத்தையும் அனுபவிக்க வேண்டும் எனவும் கூறப்படுகின்றது.

அதாவது தாய் பற்றி பாடுகையில் நமக்கு தாய் பாலூட்டி, மனிதனாக்கி இந்த நிலைக்கு கொண்டு வந்த தாய்க்கு, இவ்வுலகில் எச்செல்வங்களும்



ISBN 978-955-627-120-1

நிகரில்லை. அவ்வாறான தாய்க்கு மாறாக எதுவும் செய்யாமலேயே இவ்வுலகை விட்டு நீங்கி சென்று விட்டேன் எனும் இரங்கல் உணர்வு வெளிப்படுத்தப்படுகின்றமை சிறப்பம்சம்.[14] மனிதவாழ்வு, பஞ்சமாபாதகங்கள், கர்மவினை ஆகிய தொனிப் பொருட்களில் அமைந்த பாடல்களும் பாடப்படும்.

### 3.8 வாய்க்கரிசிபோடுதல்

இந்துக்களை பொறுத்த வரையில் இறந்தவர் பசி தாகத்துடன் செல்ல கூடாது என்பதற்காகவும் இதுவரை காலம் உணவு தந்தவருக்கு வாய் நிறைய அரிசி போடவேண்டும் என்கிற நன்றி செலுத்தும் விழுமியத்தை எடுத்துக் காட்டவும் இவ்வழமை மேற்கொள்ளப்படுகின்றது. பெண்கள் வீட்டிலேயே வாய்க்கரிசி இடுவர்.[15] ஆனால் பௌத்தர்களுக்கிடையே இவ்வாறான வழக்கம் இல்லை. இவர்கள் பிரேதத்தை நோக்கி கைப்படா வணங்குவர். காரணம் அது அவர்களின் இறுதி பயனத்திற்கு கொடுக்கும் மரியாதையாகும்.

### 3.9 பிரேதத்தை அடக்கம் செய்யும் முறைகள்

இருமதத்தவரும் குறிப்பிட்ட சில தினங்களில் பிரேதத்தை அடக்கம் செய்வதில்லை. இந்துக்கள் புதன், சனி போன்ற தினங்களிலும், பௌத்தர்கள் செவ்வாய், வெள்ளி போன்ற தினங்களிலும் அடக்கம் செய்யமாட்டார்கள்.[16] இந்துக்கள் சனிக்கிழமையில் இறந்த பிரேதத்தை அடக்கம் செய்யும் பெட்டியினுள் முட்டை வைப்பர். ‘சனிப்பினம் தனிப்போகாது’ என்பதற்கினங்கவே ஒரு உயிரை ஒரு பெட்டியினுள் வைத்து அடக்கம் செய்வர். இது போலவே பௌத்தர்களும் செவ்வாய், வெள்ளியில் இறந்தவர்களை அடக்கம் செய்யும் போது முட்டை வைப்பர்.[17]

இந்துக்கள் அடக்கம் செய்ய பிரேதத்தை மயானத்திற்கு கொண்டு செல்லும் முன்பு மயானத்திற்கு மூவர் மட்டுமே செல்வர். சவக்குழி வெட்டுவதற்கு மண்வெட்டி, அலவாங்கு, கோடரி ஆகிய மூன்று கருவிகளை கொண்டு செல்வதற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருவியுடன் செல்வர். பௌத்தர்களிடம் இத்தகைய நம்பிக்கைகள் இல்லை.

பிரேதம் எடுத்து செல்லும் போது கால்பக்கம் முன் கொண்டு செல்ல வேண்டுமென்பது இரு சமூகத்தினதும் நம்பிக்கையாகும். பிரேதம் வீட்டை விட்டு செல்லும் போது அந்த வீட்டின் தொடர்பு முற்றும் முழுதாக அறுந்து விடுகின்றது என்பதன் அடையாளமாகவே இவ்வாறு தூக்கிச் செல்கின்றனர் என்பது இந்துக்களது கருத்தாக இருக்கின்ற போதிலும், பௌத்தர்கள் இதற்கான காரணத்தை அறிந்திருக்கவில்லை.

வழியில் எதிர்ப்படும் பேய், பிசாசுகள், துர்தேவதைகளை திருப்திபடுத்துவதற்காக அரிசி, தேங்காய் வண்டுகள், மஞ்சற் கலவை, நெற்பொறி என்பன இந்துக்களால் எடுத்துச் செல்லப்படுகின்றன.[18] பௌத்தர்கள் நெற்பொறிகள் மாத்திரம் எடுத்துச் செல்கின்றனர். இதனை ‘விலந்த’ என்றழைப்பர்.[19] இது இறந்தவரின் உறவுக்காரர்களாலேயே மேற்கொள்ளப்படும். இந்து சமூகத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட வழமையாக பௌத்தர்கள் இதனை தெரிவிக்கின்றனர்.

இந்துக்களின் வழமையில், பிரேதம் அடக்கம் செய்யப்படும் குழியைப் பொறுத்தவரையில் ஆண்கள் ஆயின் ஆறு அங்குல நீளமும், இடுப்பளவு உயரமும் கொண்டதாக அமைக்கப்படும். பெண்களாயின் ஆறு அங்குல நீளமும், மார்பளவு உயரமும் கொண்டமைக்கப்படும்.[20] மூன்று முறை இடப்பக்கமாக சுற்றி, பிரேதத்தின் தலை பக்கம் தெற்கே இருக்க கூடிய வகையில் குழியினுள் பிரேதத்தை வைக்க வேண்டும். இதன் போது கொல்லிக்குடம்



ISBN 978-955-627-120-1

உடைத்தலும் இடம் பெறும். இந்துக்களின் மரணச்சடங்கில் கொல்லிக்குடம் வைத்தல் முக்கியம் பெறுகின்றது. இறந்தவரின் மல நீக்கம் செய்வதன் பொருட்டும், இறந்தவரிடத்தில் இருக்கும் ஆசைகள் அனைத்தையும் நீக்கும் பெறும் பொருட்டும், தூய்மையான உடல் சிவமாகிய உடலில் கலக்கப்படுவதற்கும் இது நிகழ்த்தப்படுகின்றது.[21] ஆனால் இச்செயற்பாடு பௌத்தரிகளிடையே இடம்பெறுவதில்லை. இருப்பினும் பௌத்தர்களால் இந்நோக்கங்களை அடையும் பொருட்டு வேறுவிதமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தொடர்ந்து உடம்பில் ஏதேனும் அணிகலன்கள் இருப்பின் அவை மயானத்தில் வைத்தே அகற்றப்படும். தொடர்ந்து பிரேதத்தின் மீது மண்பிடி போடப்பட்டு மூடப்படுவதுடன் கிரியைகள் நிறைவுறும்.

இந்துக்களை பொறுத்தவரை இறந்தவர்கள் பிராமணர்களாயின் எரிப்பர். பிராமணாகள் அல்லாதவர்களும் சில சந்தர்ப்பங்களில் எரிக்கப்படுவதுண்டு. ஆனால் பௌத்தர்கள் சிறு குழந்தைகள் மரணமானால்தான் பிரேதத்தைப் புதைப்பர்.[22] ஏனையோரை அவர்கள் எரிக்கின்றனர். ஆனால் தற்காலத்தில் இந்த நடைமுறை மாற்றமடைந்து வருகின்றது. இந்துக்களைப் போன்று எல்லாப்பிரேதங்களையும் எரிக்கும் வழமைக்கு இவர்கள் மாறி வருகின்றனர்.

பௌத்தர்கள் பிரேதத்தை அடக்கம் செய்வதற்கு மயானத்திற்கு கொண்டு செல்வது கட்டாயம் மாலைப் பொழுதாக தான் இருக்கும். பௌத்தர்கள் பிரேதத்தை மயானத்திற்கு கொண்டு செல்லும் நாளன்று (3ஆம் நாள்) பிக்குமார் இறப்பு நிகழ்ந்த வீட்டிற்கு வரவழைக்கப்படுவர்.[23] அவர்கள் வரும் போது வீட்டுக்காரர் அவர்களது கால்களை கழுவி வரவேற்று பிரேதத்திற்கு அருகாமையில் வெள்ளை விரிப்பு ஒன்றில் மேல் அமர்த்தப்படுவர். இப்பிக்குமார்கள் 'ஹாத்தா' ஓதிக்கொண்டு நீர் உள்ள பாத்திரமொன்றை எடுத்து அதில் கொஞ்சம் கொஞ்சமாக நீர் ஊற்றி ஹாத்தா ஓதுவார்கள். இது பிரேதத்தை வீட்டில் இருந்து கொண்டு செல்லும் வரை இடம்பெறும். இறந்தவரின் பாவங்கள், ஆசாபாசங்கள் தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காகவும் இறந்த உயிரானது நற்கதியினை பெற வேண்டும் என்பதற்காகவும் இக்கிரியை செய்யப்படுகின்றது.[24]

### 3.10 மரணமும் தீட்டும்

இந்துக்களின் சம்பிரதாயப்படி மரணம் நிகழும் வீட்டிற்கு சமயக்கிரியைகள் நிகழ்த்தும் பொருட்டு மதகுருமார் எவரும் வருவதில்லை. வீட்டில் உள்ள பெரியவர்களாலேயே நிகழ்த்தப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணம் மதகுருமார் 'தீட்டு' எனும் வழமையை கடைப்பிடிப்பதாகும். இவர்கள் 31ஆம் நாள் சடங்கு செய்வதற்கே முதன்முதலாக இறப்பு இடம்பெற்ற வீட்டிற்கு வந்து கிரியைகள் செய்து 'தீட்டு' கழிப்பர்.[25] ஆனால் பௌத்தர்களை பொறுத்த வரையில் மதகுருமார் பிரேதம் இருக்கும் போதே அவ்வீட்டிற்கு வந்து செய்யவேண்டிய கிரியைகள் செய்து முடிப்பர். பௌத்தர்களை பொறுத்த வரையில் அவர்களுக்கு 'தீட்டு' அவர்களது கிரியைகளில் தாக்கம் செலுத்துவதில்லை.

### 3.11 பிரேதத்தை அடக்கிய பின்னர் செய்யப்படும் சடங்குகள்

இந்துக்களை பொறுத்தவரை அடக்கம் செய்து வீட்டிற்கு வந்ததன் பின்னர் மயானத்திற்கு சென்றவர்களும், வீட்டில் இருப்பவர்களும் நீராடி, வீட்டினையும் கழுவி சுத்தம் செய்வர். பின்னர் மயானத்திற்குகொண்டு சென்ற மண்வெட்டி ஒரு வெள்ளைத் துணியால் மூடப்பட்ட நீர் செம்பு, குத்து விளக்கு என்பன பிரேதம் இருந்த அறைக்குள் வைப்பர்.[26] இவற்றோடு வாசலிலும் இளநீர் வெட்டி வைப்பர். இதன் பின்னரே உறவினர் கொண்டுவந்த உணவை வீட்டுக்காரர்களுக்கும், நண்பர்கள் மற்றும் அனைத்து உறவினர்களுக்கும் வழங்கப்படும். பிரேதம் அடக்கம் செய்த பின் இந்துக்கள் நீராடிய பின்னரே உணவு உண்பர். ஆனால் பௌத்தர்களை இதில் இருந்து முற்றிலும் வேறுபட்டவர்களாக பிரேதம் அடக்கம்



ISBN 978-955-627-120-1

செய்யப்பட்டவுடன், வீட்டிற்கு வந்து நீராடுவதற்கு முன்னரே பூசனி காய்க்கறி, கருவாட்டுக்கறி என்பவற்றோடு உணவு உண்பது விசேடம்சமாகும்.

இந்துக்கள் பிரேதத்தை அடக்கிய பின்னர் செய்யப்படும் சடங்குகளில் 3ஆம் நாள் சடங்கு, 8ஆம் நாள் சடங்கு, 31ஆம் நாள் சடங்கு என்பன முக்கியமானவை. இறப்பு நடைபெற்று மூன்றாம் நாள் அன்று இந்துக்கள் மயானத்திற்கு சென்று பிரேதமேடைக்கு பாலூற்றுவர். இது மூன்றாம் நாட் சடங்கின் முக்கிய நிகழ்வாகும். ஆனால் பௌத்தர்கள் அவ்வாறு இல்லை. பௌத்தர்கள் மூன்றாம் நாள் அன்று பிக்குமார்களுக்கு தானம் அளிப்பர். (தானய) இது பன்சலவிற்கு (விகாரை) கொண்டு கொடுக்கப்படும்.

இவற்றுள் 8ஆம் நாள் சடங்கு 'எட்டுக்கு வைத்தல்' எனும் பெயரில் விசேடமாக இடம் பெறுகின்றது. இச்சடங்கு பத்ததிகளிலோ, கிரியை முறைகளிலோ இல்லாத ஒன்று. குறித்த நபர் இறந்து 8ஆம் நாள் அவர் விரும்பி உண்ணும் உணவுகளை தேடி படைப்பர். அதில் ஒரு பகுதியை ஊரிலுள்ள முச்சந்தியில் பேய், பிசாசு, இராட்சசர்களுக்கு கழித்து விடப்படும்.[27]

இந்துக்கள் 'எட்டுக்கு வைத்தல்' நிகழ்த்துவது போன்று பௌத்தர்கள் 7ஆம் நாள் தானம் கொடுப்பர். 6ஆம் நாள் இரவே பிக்குகளை வீட்டிற்கு வரவழைத்து அன்றிரவே கிரியைகளும், சமய அனுஷ்டானங்களும் மேற்கொள்ளப்படும். தானம் இடம்பெற இருக்கும் வீட்டில் தோரணம் கட்டுவர். தானம் கொடுக்க இருக்கும் வீட்டை அடையாளப்படுத்துவதற்காக பாடல் ஒன்று ஒலிபெருக்கியால் ஒலிபரப்படும். அதை வைத்து அனைவரும் தானம் வீடு இருப்பதை அறிந்துக் கொள்வர். இதில் தெரிந்தவர்கள் மாத்திரம் இன்றி தெரியாதவர்களும் இன்முகத்துடன் வரவழைக்கப்பட்டு பசியாறிச் செல்வர். இவ்வுணவு வகைகள் இறந்தவரின் வயதில் இருக்கும் அயலவருக்கு பகிர்ந்தளிக்கப்படும்.[28]

31ஆம் நாள் நினைவஞ்சலியானது இந்துக்களால் சிறப்பாக மேற்கொள்ளப்படும். இச்சடங்கில் பல மரக்கறி உணவுகள் சமைக்கப்பட்டு வீட்டிற்கு வருவோர்களுக்கு வழங்கப்படும். இதன்போது மரண வீட்டிற்கு (பிரேதம் வீட்டில் இருக்கும் போதோ அல்லது அதற்கு பின்னரோ) வந்த அனைவரும் வரவழைக்கப்படுவர். ஆனால் பௌத்தர்களால் 31ஆம் நாள் நிகழ்வு இடம்பெறுவதில்லை. அவர்கள் 90ஆம் நாளினை (3 மாதம்) மிகவும் சிறப்பாக நடத்துவர். 90ஆம் நாளன்று மாமிச உணவுகள் உட்பட அனைத்து வகையான உணவுகளும் சமைக்கப்பட்டு தானம் வழங்கப்படும்.[29] இத்தினத்தில் வீட்டிற்கு பிக்குமார்கள் வரவழைக்கப்பட்டு விருந்தோம்பல் இடம் பெறும். இதனை 'தும்மாசதானய' 'சங்கிகதானய' என்றும் அழைப்பர்.[30]

முதலாம் வருட நினைவஞ்சலியை இருமதத்தவரும் மேற்கொள்வர். இந்துக்கள் இதனை வீட்டில் நடத்துவர். அபரக்கிரியைகள் என்ற பெயரில் இவை இங்கு நிகழ்த்தப்படுகின்றன. ஆலயங்களில் பூசைகளை மேற்கொள்வதுடன், முதியோர் இல்லம், அநாதை இல்லங்களுக்கு தானம் அளிப்பர். 'வைதரன் கோதானம்' என்ற பெயரில் இதனை அளிப்பர்.[31] இவ்வாறே பௌத்தர்கள் பன்சலையிலே தானம் கொடுப்பர். இவ்வாறு வழங்கப்படும் தானத்தை தன்சல என்று அழைப்பர்.

இறந்த உறவுகளின் பெயரால் புரோகிதனுக்கு வழங்கப்படும் உடுபுடவைகள், உணவுப் பொருட்கள் என்பன ஆன்மாவைச் சென்றடைகின்றன என்ற நம்பிக்கை இந்துக்களிடம் காணப்படுகின்றது. அதனால் இறந்தவர்களின் உறவினர்கள் புரோகிதர்களை அழைத்து வந்து அவர்களைக் கொண்டு சில கரணங்களைச் செய்வித்த பின்னர் உடைகளையும் உணவுப் பொருட்களையும் வழங்கி வருகின்றனர். இந்துக்கள் இத்தகைய தானத்தை 'நக்னதானம்' எனும் பெயரால் சுடுகாட்டிற்கு வெளியே வைத்து வழங்குகின்றனர். இவ்வழக்கம்



ISBN 978-955-627-120-1

பௌத்தர்களிடையேயும் காணப்படுகின்றன. சுடுகாட்டில் அல்லது இடுகாட்டில் வைத்து புத்த குருவுக்கு இறந்தவரின் பெயரால் தானம் வழங்கப்படுகின்றது.

## 4. தொகுப்பும் முடிவுரையும்

அம்பாறை மாவட்டத்தில் இந்துக்களினதும் பௌத்தர்களினதும் இறப்பு தொடர்பான சடங்குகளில் இரு சமூகத்தினரும் மேற்கொள்ளும் பொதுவான சம்பிரதாயங்களாக,

- மரணம் நிகழ்ந்ததை தெரியப்படுத்தல்
- இறந்தவர்களுக்கு அணிவிக்கப்படும் ஆடை, அணிகலன்கள் - பொதுவாக இருப்பினும் அணியப்படும் ஆடைகளில் வேறுபாடுள்ளது.
- இறந்தவரின் தலைப் பகுதியை வைக்கும் திசைக்கு முக்கியத்துவம்
- உடலை வெள்ளை சீலையால் மூடி வைத்தல்
- பிரேதம் வைக்கும் இடத்தின் மேல் வெள்ளைக் கட்டுதல்
- உடலின் தலைமாட்டில் குத்துவிளக்கேற்றல்
- வாசகங்கள் ஓதல் (இந்துக்கள் - திருமுறைகள், வைகுந்த அம்மானை பௌத்தர்கள் - மரண காவியம் (மழபெத)
- குறிப்பிட்ட தினங்களில் அடக்கம் செய்யக் கூடாது என்ற நம்பிக்கை - இந்துக்கள் புதன், சனி போன்ற தினங்களிலும், பௌத்தர்கள் செவ்வாய், வெள்ளி போன்ற தினங்களில் அடக்கம் செய்யமாட்டார்கள்.
- பிரேதத்துடன் முட்டை வைத்தல்
- பிரேதம் எடுத்து செல்லும் வழியில் அரிசி, தேங்காய் வண்டுகள், மஞ்சற் கலவை, நெற்பொறி என்பன எடுத்துச் செல்லப்படுதல்
- பிரேதம் எரிக்கப்படுதல்

ஆகியனவற்றை அடையாளங் காணமுடிகின்றது. இதுபோல் இந்துக்களால் மாத்திரம் மேற்கொள்ளப்படும் இறப்புச் சடங்குகளாக,

- கொல்லிக்குடம் வைத்தல் - மல நீக்கம் செய்வதன் பொருட்டும், இறந்தவரிடத்தில் இருக்கும் ஆசைகள் அனைத்தும் நீக்கம் பெறும் பொருட்டும் செய்யப்படுகின்றது
- பிரேதத்திற்கு எண்ணெய் தோய்த்து நீராட்டுதல்
- வாய்க்கரிசிபோடுதல் - இந்துக்களை பொறுத்த வரையில் இறந்தவர் பசி தாகத்துடன் செல்ல கூடாது என்பதற்காகவும் இதுவரை காலம் உணவு தந்தவருக்கு வாய் நிறைய அரிசி போட வேண்டும் என்பதற்காகவும் இது நிகழ்த்தப்படுகின்றது.
- இறப்பு நடைபெற்று மூன்றாம் நாள் அன்று இந்துக்கள் மயானத்திற்கு சென்று பிரேதமேடைக்குச் பாலூற்றுவர்.

என்பனவற்றை காணலாம்.

- இறந்தவரின் பிரேதத்திற்கு அருகில் யானைத்தந்தம் வைத்தல்
- பிரேதம் 3 நாட்கள் வீட்டில் இருத்தல்
- வீட்டில் பிரேதம் இருக்கும் போது சமையல் அடுப்பினை எரிக்கக் கூடாது.
- குருமாரின் ஹாத்தா சடங்கு
- பௌத்தர்கள் மூன்றாம் நாள் அன்று பிக்குமார்களுக்கு தானம் அளிப்பர்.

போன்றன பௌத்தர்களால் மாத்திரம் மேற்கொள்ளப்படும் இறப்புச் சடங்குகளாக உள்ளன.



ISBN 978-955-627-120-1

முடிவாக, வாழ்வியற் சடங்குகள் என்பது மனிதனது வாழ்வின் நலன் கருதி செய்யப்படும் சடங்குகளாகும். அச்சடங்குகள் ஒவ்வொரு மதத்தினதும் கலாசாரத்தை வெளிப்படுத்துகின்றது. வழிவழியாக செய்யப்பட்டுவந்த சடங்குகளை எதிர்காலத்தில் அழிந்து விடாது இருக்கும் வகையில் அவற்றை பாதுகாக்க வேண்டும். அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்துக்களின் வாழ்வியலுக்கும் பௌத்தர்களின் வாழ்வியலுக்கும் மிக நெருங்கிய தொடர்புகள் உள்ளன. இவற்றினை இவர்கள் எவ்வித உடன்படிக்கைகளோ, உள்நோக்கங்களோ இல்லாமல் தம்மையறியாமல் செய்து வருகின்றனர். இவ்வாறு இவர்கள் இயங்குவதற்கு பண்பாட்டு இடைவினையே காரணமாகின்றது. இவர்கள் தமது வாழ்வியற் சடங்குகளில் இத்தகைய பரஸ்பரத் தொடர்புகள் உள்ளதென்பதை உணர்வார்களாயின் இவர்களின் உறவுகளில் அன்னியோன்யம் அதிகரிக்கும், பிரிவனைகளை மறப்பர், நல்லிணக்கம் பெருகி ஒன்றுபட்ட நடத்தை முறைகள் உருவாகும் சூழ்நிலைகள் ஏற்படும்.

**அடிக்குறிப்புகள்**

விக்கிரமசிங்க,பி., ஆசிரியர், (நேர்காணல், 10.06.2016)
ரணசிங்க,யு., வர்த்தகம், (நேர்காணல், 20.06.2016)
சமரசிங்க,ஆர்., விவசாயி, (நேர்காணல், 11.06.2016)
எதிரிவீர, எம்., **பௌத்த ஆச்சாரிய,** ப.176
நிரஞ்சன,கே.எம்., **பௌத்த சீல,** பக்.103,104
மேலது, ப.105
ஏகநாயக,ஏ., **ஜோன் டேவி சஹா உடரட சிங்ஹளயோ,** ப.119
மேலது, பக்.120,121
மாயாரஞ்சன், **திகாமடுல்ல ஆச்சார்ய,** ப.78
மேலது, ப.79
நிரஞ்சன,கே.எம்., **பௌத்த சீல,** ப.106
எதிரிவீர, எம்., **பௌத்த ஆச்சாரிய,** ப.180
மேலது, ப.181
ஏகநாயக,ஏ., **ஜோன் டேவி சஹா உடரட சிங்ஹளயோ,** ப.121
மேலது, ப.122
மாயாரஞ்சன், **திகாமடுல்ல ஆச்சார்ய,** ப.86
மேலது, ப.87
விக்கிரமசிங்க,பி., ஆசிரியர், (நேர்காணல், 10.06.2016)
ரணசிங்க,யு., வர்த்தகம், (நேர்காணல், 20.06.2016)
மாயாரஞ்சன், **திகாமடுல்ல ஆச்சார்ய,** ப.78
எதிரிவீர, எம்., **பௌத்த ஆச்சாரிய,** ப.179
நிரஞ்சன,கே.எம்., **பௌத்த சீல,** பக்.108,109
மேலது, ப.110
மாயாரஞ்சன், **திகாமடுல்ல ஆச்சார்ய,** ப.95
மேலது, ப.96
எதிரிவீர, எம்., **பௌத்த ஆச்சாரிய,** ப.179
மேலது, ப.180
நிரஞ்சன,கே.எம்., **பௌத்த சீல,** பக்.108,109
மேலது, ப.110
எதிரிவீர, எம்., **பௌத்த ஆச்சாரிய,** ப.179
சோமசுந்தரம்,கு., (1999), சைவ வாழ்வியல், ரஜி வெளியீடு, ப.53



ISBN 978-955-627-120-1